




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 01.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்








# தமிழக நிகழ்வுகள்

- சென்னை: ராமநாதபுரத்தில், **345 கோடி ரூபாய் செலவில்**, புதிதாக, இரு அரசுமருத்துவக் கல்லூரிகள், பிரமாண்டமாக்கப்பட உள்ளன. இக்கல்லூரிகளுக்கு, **மார்ச் 1 அன்று முதல்வர் எடப்பாடி பனிச்சாமி அடிக்கல் நாட்டினார்.**
  - மத்திய அரசு, 2019 அக்டோபர் 23ல், ஒரே நேரத்தில், ஆறு அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கவும் அதே மாதம், 27ம்தேதி, மேலும் **மூன்று அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கவும், தமிழகத்திற்கு அனுமதி அளித்தது.**
  - **செய்தி துளிகள்**
    - இக்கல்லூரிகளை துவங்க, **மத்திய அரசு, 2,145 கோடி ரூபாய் மாநில அரசு, 1,430 கோடி ரூபாய் வழங்க உள்ளன.**

# சர்வதேச நிகழ்வுகள்

- **ஆப்கானிஸ்தானில் நீடித்த அமைதியை** ஏற்படுத்துவதற்கு வகைசெய்யும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தில் **அமெரிக்காவும் தலிபான் அமைப்பும்** பிப்ரவரி 29 அன்று கையெழுத்திட்டன.
  - கத்தார் தலைநகர் தோஹாவில் கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில், ஆப்கானிஸ்தானிலிருந்து தங்களது


We Shine Academy

படையினரை இன்னும் **14 மாதங்களில்** முழுமையாக விலக்கிக் கொள்ள அமெரிக்காவும், அல்கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகளுடனான தொடர்பைத் துண்டித்துக்கொள்ள தலிபான் அமைப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.

- **செய்தி துளிகள்**
- ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தை, கத்தார் தலைநகர் தோஹாவில் பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.
- இந்த ஒப்பந்தத்தில் **அமெரிக்க தூதர் ஜல்மே கலீல்ஜாத்தும், தலீபான்** துணைத்தலைவர் முல்லா அப்துல் கானியும் கையெழுத்து போட்டனர்.

## விருதுகள்

- மருத்துவ விஞ்ஞானத்தில் **50 பிரிவுகளைக்** கண்டறிந்து பதில் கூறிய **4ம் வகுப்பு மாணவி ருவந்திகா மாரிக்கு** இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
  - ஆசியா சாதனையாளர் புத்தகம் நிறுவனம் சார்பில் சென்னை பெருங்குடியில் உள்ள **இந்தியன் பப்ளிக் பள்ளியில்** இளம் சாதனையாளருக்கான போட்டி நடத்தப்பட்டது. **நடுவர் விவேக்நாயர் முன்னிலையில்** நடைபெற்ற இந்தப்போட்டியில் ருவந்திகாமாரி என்ற 4ம் வகுப்பு மாணவி கலந்து கொண்டு ஒரு நிமிடத்தில் கம்ப்யூட்டரில் காட்சிப்படுத்தப்பட்ட மருத்துவ


We Shine Academy TM

விஞ்ஞான 50 பிரிவுகளைச் சரியாக கண்டறிந்து பதில் அளித்துள்ளார்.

- **செய்தி துளிகள்**
- **இந்தியா, வியட்நாம், லாவோஸ், நேபாளம்** ஆகிய நாடுகளில் உள்ள இளம் சாதனையாளர்கள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சாதனையாளர்களை ஒப்பிட்டுப் பார்க்கவும் போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெறும் இளம் சாதனையாளர்களுக்கு ஆசியா சாதனையாளர்கள் புத்தகம் சார்பில் இளம் சாதனையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

## நியமனங்கள்

- மலேசியாவின் புதிய பிரதமராக **முன்னாள் உள்துறை அமைச்சர் முஹைதீன்யாசினை** அந்தநாட்டு மன்னர் நியமித்துள்ளார்.
    - மக்களின் நலன்களைப் பாதுகாக்க நாட்டுக்கு உடனடியாக அரசு தேவைப்படுகிறது. இந்தநிலையில், முன்னாள் உள்துறை அமைச்சர் முஹைதீன்யாசினை புதிய பிரதமராக மன்னர் நியமித்துள்ளார்.
    - இதையடுத்து, அவர் **மார்ச் 1 அன்று** பதவிப் பிரமாணம் செய்யவிருக்கிறார் என்று அரசவை வட்டாரங்கள் தெரிவித்தன.
    - **செய்தி துளிகள்**
    - மலேசியாவில் கடந்த 2018-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஊழல் குற்றச்சாட்டுகளுக்குள்ளான அப்போதைய

பிரதமர் நஜீப்ரஸாக் தோல்வியடைந்தார்.

## முக்கிய தினங்கள்

- **பூஜ்ஜிய பாகுபாடு தினம்** 2014லிருந்து ஐ.நா மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள் மார்ச் 1 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.
    - நோக்கம்: சட்டத்தின் முன்பும், செயல்முறையிலும் அனைவரும் சமம் என்பதை ஐ.நாவின் அனைத்து உறுப்பினர் நாடுகளிலும் ஊக்குவித்தல்.

## திருக்குறள்

**குறள்: 124**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: அடக்கம் உடைமை

**நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**

**மலையினும் மாணப் பெரிது.**

**விளக்கம்:** உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.